# திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்
என்.வி.நடராசன்


தலையங்கள்

## அறப்போர் துவக்கம்!

இந்தித் திணிப்பை எதிர்த்து, கழகம் மேற்கொண்டுள்ள அறப்போர், நவம்பர். 17-ம் நாளன்று துவங்குகிறது. அரசியல் மேதையும் கழகத்தின் தனிப்பெருந் தலைவருமான அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த அறப்போராட்டத்தைத் துவக்கி வைக்கிறார்கள்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற கழக மாநாட்டில் எடுத்த முடிவுக்கேற்ப **அறிஞர் அண்ணா** அவர்களும், அவருடன் கழகப் பொதுக்குழு உறுப்பினர்களான **தோழர் டி. எம். பார்த்தசாரதி, தோழர் டி.கே. பொன்னுவேலு** புரசை தி. மு. கழக முன்னாள் செயலாளரும், சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்க முன்னாள் பொருளாளரும், தையற்கலை ஆசிரியருமான **தோழர் கே. பி. சுந்தரம்**, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் **தோழர் வி. வெங்கா** ஆகிய ஐவரும், அரசியல் சட்டத்திலுள்ள இந்தித்திணிப்புப் பிரிவை மட்டும் கொளுத்தப் போகிறார்கள். அண்ணா அவர்கள் துவக்கி வைக்கும் இந்த அறப் போராட்டம் தொடர்ந்து 1965-ஆம் ஆண்டு சனவரி வரையில் நாடெங்கும் நடைபெற திட்டம் வகுக்கப்பட்டிருப்பதை அரசினர் உள்ளிட்ட அனைவரும் அறிந்ததேயாகும்.


நவம்பர் 12-ம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில்,

"இந்தித் திணிப்பு அநீதியை எதிர்த்துக் கழகம் விடுத்த வேண்டுகோள், வைக்கப்பட்ட வாதங்கள், அறிவுரைகள் அனைத்தையும் சர்க்கார் புறக்கணித்துவிட்டன வென்றும், சனநாயக உள்ளத்துடன் இப்பிரச்சனையை அணுகவும், தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் அரசினர் முன்வரவில்லையென்றும், எனவே சனநாயக அடிப்படையில் அரசினருக்கு மக்களின் உள்ளக் குமுறலை எடுத்துக்காட்டவே இந்த அறப்போராட்டத்தில் கழகம் ஈடுபடுகிறது" என்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஏதோ கட்சிவெறி அல்லது பதவி ஆசை போன்ற குறுகிய நோக்கங்கள் ஏதுமின்றி, தென்னக மக்களின் எண்ணத்தை—தீர்ப்பை எடுத்துக்காட்டி இந்தி வெறியர்களின் ஆதிக்கமும் ஆசாபாசமும், முரட்டுப் பிடிவாதமும் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து அறவே அகன்று சனநாயகப் பண்பு ஓங்கிவளர வேண்டும் என்ற தூய்மையான எண்ணத்துடனேயே கழகம் இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. கழகத்தின் இந்த நல்ல எண்ணத்தை, மதித்து நடக்கும் விவேகத்தைச் சர்க்கார் இழந்துவிட்டது வருந்தத்தக்கதேயாகும்.

சட்டத்தை, சிறைச்சாலைகளை, தடியடி தர்பாரை, அடக்குமுறை அட்டகாசத்தைக் காட்டி எதிர்க்கட்சியின் உரிமைகளை

(9-ம் பக்கம் பார்க்க)



நவ. 17-ம் நாளன்று அறப்போரில் ஈடுபடும் கே. பி. சுந்தரம், டி. கே. பொன்னுவேலு அறிஞர் அண்ணா, டி. எம். பார்த்தசாரதி, வி. வெங்கா.


16—11—63
10 பக்கங்கள்


வார இதழ்

16 காசு.

# வட சென்னையில் பெண்கள் கல்லூரி

—[ ... ]—

## எம். ஜி. ஆர். வழிகோலுகிறார்



வடசென்னையில் சர். தியாகராசர் பெயரால் ஆண்கள் கல்லூரி ஒன்று இருப்பதுபோல், அவருடைய பெயரில் பெண்கள் கல்லூரி ஒன்றும் இருக்கவேண்டும் என்பது மறைந்த பெரியார் பார்த்தசாரதி அவர்களின் பெரு விருப்பமாகும். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், பெண்கள் கல்லூரி ஒன்றை நிறுவ கொடை உள்ளம் படைத்தவர்கள் முன்வர வேண்டும்; அதற்கு நானும் உரிய அளவு நன்கொடை வழங்கக் காத்திருக்கிறேன்.

—என்று தியாகராயர் கல்லூரி பாதுகாப்புக் குழுத் தலைவர், புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம். எல். சி. அவர்கள், திரு. பார்த்தசாரதி (நாயகர்) மறைவுகுறித்து நடந்த இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்.

இக்கூட்டம் வண்ணை சர். தியாகராயர் கல்லூரியில் நேற்று மாலை மேயர் குசேலர் தலைமையில் நடைபெற்றது.

மறைந்த பெரியாரின் உருவப் படத்தை, சட்டமன்றமேலவைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் திறந்துவைத்தார்.

பெரியார் பார்த்தசாரதி அவர்களின் அரும்பணியினைப் பாராட்டி திருமதி தாராசெரியன், திருவாளர்கள் என். வி. நடராசன், மாயாண்டி (நாடார்) எம்.எல்.ஏ. துணைமேயர் வேதாசலம், எம். ராதாகிருஷ்ண(பிள்ளை), அசோகன், முனுசாமி (ரெட்டி), கீவளூர் மீனாட்சிசுந்தரம் (பிள்ளை), சுந்தரமூர்த்தி (செட்டியார்), செல்வப்பதி (செட்டியார்) ஆகியோர் பேசினர்.

## அண்ணாவின் அன்புக் கட்டளை!

தேர்தலில் நிற்கமுடியாபடி எங்களைச் செய்துவிட்டு நிம்மதி பெற்றுவிடலாம் என்று காமராசர் கருதினார். அது நடைபெறாது—நடைபெற விடக்கூடாது!

1967-ல் இந்த ஆட்சியை வீழ்த்துகின்ற அளவில் நீங்கள் ஆதரவு தரவேண்டும்.

இந்தி எதிர்ப்பு அறப்போரிலே ஈடுபட்டு நான் அறிவித்த தோழர்கள் ஏற்றுக்கொண்ட — ஏற்றுக்கொள்ளப் போகும் இன்னல்கள் ஏராளம்! அந்த இன்னல்களை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் சென்றபின், எடுத்த காரியம் வெற்றி பெறும்வரை உறுதியுடனும் உற்சாகத்துடனும் நீங்கள் பணியாற்றவேண்டும்.

சென்றவர்கள் போக நின்றவர்கள்—நிறுத்தப்பட்டவர்கள், தேர்தல் முனையிலே முன்னைவிடப் பன்மடங்கு ஆட்சியாளரைத் திறமையோடு எதிர்த்து நிற்கவேண்டும்.

அமைதி குலையாமல்—கண்ணியம் கடுகளவும் தவறாமல்—கட்டுப்பாடோடு இந்தப் போராட்டத்தில் நீங்கள் கலந்துகொண்டு பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். — சென்னைக் கூட்டத்தில் அண்ணா!



# இலக்கிய உலகம்!

பேராசிரியர்
மா. கி. தசரதன்
எம்.ஏ.

## எது இலக்கியம்?

'இதுதான் இலக்கியம்' என்று திட்டவட்டமாகச் சொல்லி விளக்குவதற்கு வழி இல்லை. ஆனால் இலக்கியம் என்று எண்ணியவுடன் ஏதேனும் ஒரு நூலின் உருவம் நம்முடைய மனத்தில் தோன்றுகின்றது. அதனை இலக்கியம் என்கிறோம். வேறு சில நூல்களை இலக்கியமல்ல என்று ஒதுக்கிடுகின்றோம். ஏன் சிலவற்றை ஏற்றுக் கொள்ளுகின்றோம்? சிலவற்றைத் தள்ளிவிடுகிறோம்? உண்மைக் காரணம் என்ன என்பதை அறிந்துகொண்டால் இலக்கியம் இன்னதுதான் என்று சொல்ல இயலும்.

இலக்கியம் என்று எண்ணியதும், அது அருமையானது, அதனால் நாம் பயன்பெற இயலும், அதில் சுவையிருக்கிறதுஎன்றுநம்புகிறோம். இந்த எண்ணம் என்ற தராசில் இட்டுச் சீர்தூக்கிப் பார்க்கும்போது எது எடையில் சிறக்கிறதோ அதை இலக்கியம் என்கிறோம். அல்லாததை இலக்கியம் அல்ல என்று தள்ளிவிடுகின்றோம்.

ஆகையினால் இலக்கியம் என்பது **பயன்தர வல்லதாகவும், சுவையோடு சேர்ந்ததாகவும், அருமையுடையதாகவும் இருத்தல் வேண்டும்** என்று தீர்மானிக்கின்றோம். அப்படிப்பட்ட தகுதிபடைத்தவை மட்டுமே வாழுகின்றன. பிறவெல்லாம் வாழ்விழந்து மடிகின்றன. காலம் அவற்றைத் தின்று தீர்த்துவிடுகின்றது.

## எப்படிப் பிறக்கிறது?

இவ்வளவு சிறப்புக்கள் பெற்றுள்ள இலக்கியம் மனிதனின் அரிய படைப்புக்களில் தலை சிறந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. மனிதன் இலக்கியத்தைப் படைக்கின்றான் என்றால் எல்லாராலும் அந்தப் பணியில் ஈடுபட முடிகின்றதா? உணவு எல்லா மனிதருக்கும் தேவைப்படுகின்றது; பிற வகையிலும் பல ஒற்றுமைகள் காணப்பெறுகின்றன. அப்படியானால் இலக்கியத்தைப் படைக்கும் தொழிலிலும் எல்லோரும் ஈடுபடலாம் அல்லவா? இயலும் அல்லவா? ஆனால் உண்மை நிலையோ அப்படி இல்லை. கோடிக்கணக்கான பேர்களில் 'இலக்கியப் படைப்பாளர்' யார் என்பதைக் தேடிக் காணவேண்டியநிலை இருக்கிறது. நாட்டிற்கு ஒருவராக, பல ஆண்டுகள் இடைவெளியில் ஒருவராகத்தான் இலக்கிய ஆசிரியர்களைக் காணுகிறோம்.

அவ்வளவு அருகிய தொகையினராக அவர்கள் அமைவதற்கு என்ன காரணம்? ஒருக்கால் அதில் ஆசை பலருக்கு எழுவதில்லையோ? இல்லை. எல்லோருடைய உள் மனத்திலும் எங்கேனும் ஒரு மூலையில் எழுதவேண்டும், அது ஏட்டில் இடம் பெறவேண்டும், ஏடு இலக்கியமாக வேண்டும்' என்ற ஆசை இருக்கத்தான் செய்யும். இருந்தும் இலக்கியப் படைப்பாளர்கள் சிலராக இருப்பதற்குக் காரணம், அந்தப்பணி அவ்வளவு எளிதானதல்ல என்பதுதான்.

இலக்கியம் எவ்வாறு எழுகின்றது என்று பார்ப்போம்.

ஒரு வித்து முளைத்துச் செடியாக வேண்டுமானால் அதற்குப் பல தேவைகள் நிறைவாகவேண்டும். காற்று, ஒளி, ஈரம் என்ற இவை மூன்றும் போதுமான அளவு கிடைத்தால் வித்து வெடிக்கிறது; முளை எழுகின்றது.

அதேபோல், **உணர்வு, கருத்து, சொல் இம்மூன்றும் போதுமான அளவு கிடைத்தால் இலக்கியம் பிறக்க இயலும்.** பலரிடத்தில் இம்மூன்றும் தனித்தனியே ஏராளமாக இருக்கக் கூடும். உணர்ச்சி நிரம்பியவர்களை, நிரம்ப கருத்துக்கள்—எண்ணங்கள் படைத்தவர்களை, அகராதியில் உள்ள அத்தனை சொற்களையும் அறிந்தவர்களைக் காணலாம். இவை அத்தனையும் தனித்தனியே இருக்கும்போது மாவும், சர்க்கரையும், நெருப்பும் தனித்தனியே இருப்பதைப்போல் ஒரு பயனும் இன்றி அழிந்துபோகும். ஆனால் மூன்றையும் இடவேண்டிய அளவில் இட்டுப் பாகம் கெடாமல் பயன்படுத்தினால் சுவை காணலாம்.

இலக்கியமும் இதே போன்றதுதான். சொல்லையும், கருத்தையும், உணர்ச்சியையும் நல்ல வகையில் கலந்தால் அது இலக்கியமாகும். இல்லையேல் பாகம் கெட்ட பொருள்போல் பயன் அற்று அழியும்.

## சில எடுத்துக்காட்டுகள்

ஒரு ஆண்மகன். அழகுமிக்க பெண் ஒருத்தியிடம் ஆசையை வளர்த்துக்கொண்டான். சில நாள் அவளைக் காண இயன்றது; இன்பம் கிடைத்தது. சிலநாள் சென்றபின் அவளைக் காணவும் இயலாத நிலை நேர்ந்தது. வாடினான், வருந்தினான். நண்பன், வந்தான். 'வாட்டம் ஏன்? வருத்தம் ஏன்?' என்று கேட்டுத் துன்பத்தை மிகைப்படுத்தினான். பல நாட்கள் நெஞ்சிலே கிடந்து நெருப்பாய்ச் சுட்ட அந்த நினைப்பை, தவிப்பை, நண்பனிடம் சொல்லிடத் துடித்தான்.

கேளீர், வாழியோ கேளீர்,
[நாளும்என்
நெஞ்சுபிணிக் கொண்ட
[அஞ்சில் ஓதிப்
பெருந்தோள் குறுமகள்
[சிறுமெல் ஆகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும்
[வேண்டலென் யானே
(குறுந். 280)

[நண்பனே, கேள்—என்றும் என் நெஞ்சத்தைப் பிணித்தவளாகிய அழகிய கூந்தலும் பெரிய தோளும் உடைய அந்த இளம் பெண்ணின் மெல்லிய சிறிய உடலை ஒரு நாள் கூடப் பெற்றேன் என்றால் போதும்; அதற்குப்பின், அரை நாள் வாழவும் ஆசைப்படமாட்டேன்.)

தன் நிலையை எடுத்துச் சொல்லிவிட்டான். இனி சொல்ல வேண்டி செய்தி ஒன்றும் இல்லை! வெளிப்படையாகச் சொல்லிவிட்டான். தெளிவாகவும் சொல்லியிருக்கிறான். எத்தனை நாட்கள் இந்த நினைவு உள்ளத்தில் குமைந்துகொண்டிருந்ததோ?

இவள் பெண். யாரோ ஒருவன் இவளிடம் நட்புகொண்டு இன்பம் தந்தான். இருவருக்கும் வாழ்க்கை சில நாட்கள் இனித்தது. இல்லத்தில் இருந்தவர்கள் இனிப்பின் காரணத்தை அறிந்து, புளிப்பில் ஆசைவரும்முன், கனியைக் காவலில் வைத்தனர். அவள் நெஞ்சம் விம்மியது. வழிந்த துன்பத்தைக் கண்கள் நீராகச் சிந்தின. இரவு வந்தபோது தனித்திருந்து தவித்தாள். ஊரெல்லாம் உறங்கும்போது, தான் மட்டும் விழித்திருந்து வேதனையுறுவதனை எண்ணினாள். என்னசெய்வது என்றே தெரியவில்லை. இந்தப் பாழாப்போன ஊர் என் பாடு அறியாது உறங்குகின்றதே என்று கலங்கினாள்.

முட்டுவென்கொல் தாக்குவென்கொல்!
[வேன்கொல்!
ஒரேன் யானும் ஓர் பெற்றி
[மேலிட்டு
ஆ! ஒல் எனக் கூவு வேன்
[கொல்!
அலமரல் அசைவளி அலைப்ப
[என்
உயவு நோய் அறியாது துஞ்
[சும் ஊர்க்கே.
— குறுந் 28

என் துன்பம் தெரியாமல் இந்த ஊர் மக்கள் அனைவரும் உறங்குகின்றனரே, நான் என்ன செய்வது என்று தெளிய இயலவில்லை. எங்காவது முட்டிக் கொள்ளட்டுமா, எதையேனும் தாக்கி அழியட்டுமாஆ!ஓ! என்று கூவட்டுமா, (அதாவது எல்லாரும் எழுந்து துணை நிற்பார்கள் என்று கருதுகின்றார்களோ!)

ஊரெல்லாம் உறங்கும் வேளையில் தான் மட்டும் விழித்திருந்து படும் வேதனையை வேறு எப்படிச் சொல்ல இயலும்? எவ்வளவு உணர்ச்சி இந்தப் பாட்டிலே பொதிந்திருக்கிறது!

அவனுக்கும் அவளுக்கும் இத்தனை உணர்ச்சி இருந்தது என்பதைப் புலவர்கள் சொல்லுகிறார்கள். புலவர்களுடைய மனத்தில் அவனும் அவளும் எத்தனை நாள் இருந்து இந்த உணர்ச்சியைத் தந்திருப்பர்! **புலவர்களே அவனாகவும் அவளாகவும் மாறியிருந்திருப்பர்.**

வெறும் உணர்ச்சி மட்டும் போதுமா? அதோடுசேர்த்தளிக்க வேறு ஏதாவது வேண்டாமா? மாவுமட்டும் பாகு ஆவதில்லையே! அந்த உணர்ச்சியோடு மிதந்து, புதைந்து வரும் பொருளாக ஒன்று வேண்டும் அதுவே **கருத்து.**

ஒரு பாட்டு பார்ப்போம்.

ஔவையார் ஊரெல்லாம் சுற்றினார் சில இடங்களில் நாடு அமைதிருந்தது, சில இடங்கள் காடாகவே கிடந்தன: சில இடங்கள் ஆழ்ந்த பள்ளங்களாக இருந்தன, வேறு சில பகுதிகளில் மண், மேடு இட்டுக் கிடந்தது. எல்லாப் பகுதியிலும் மக்கள் வாழ்ந்தனர். அவர்களில் சிலர் நல்லவர்களாகவும், சிலர் நயவஞ்சகர்களாகவும் இருந்தனர். இதைக் கண்டு உணர்ந்த புலவர் நெஞ்சம் உணர்ச்சியோடு ஒரு கருத்தைக் கண்டது. 'நாடோ, காடோ, மேடோ, பள்ளமோ—அதைப் பார்த்து நிலம் நல்லதா அல்லதா என்று யாரும் சொல்லவேண்டாம் எங்கே மக்கள் நல்லவர்களாக வாழ்கின்றார்களோ அது தான் நல்ல நிலம் என்றார்.

நாடுஆக ஒன்றோ; காடுஆக
[ஒன்றோ
அவல் ஆக என்று, மிசையாக
[ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்ல வாழிய நிலனே.
— புறம் 187

## பிறப்பு

உணர்ச்சியோடு, கருத்தும் சேர்ந்தது அழகிய பாட்டு பிறந்தது. ஏன் ஔவையார் வாயில் மட்டும் அந்தப் பாட்டு பிறந்தது? மற்றவர்களும்தானே அலைந்து திரிந்து அநுபவம் பெற்றிருப்பர்?

அவர்களுக்குத் தெரியாத இன்றென்றும் ஔவையாருக்குத் தெரிந்திருந்தது. அதுதான் **சொற்கோவை.**

இந்தப் பாட்டிலே வரும் எல்லாச் சொல்லும் எல்லாருக்கும் தெரியும் என்றாலும் அவற்றை இணைப்பதிலே ஔவையாருக்கு இருந்த திறமையைத்தான் இலக்கியம் என்கிறோம்.

அப்பா, அம்மா, சோறு, தாத்தா, பார், என்று எல்லாச் சொற்களையும் குழந்தை அறியும் என்றாலும் அவற்றை இணைத்துப் பேச அதற்கு ஆற்றல் இல்லை. ஆகையினால் 'அப்பா தாத்தா சோறு பார்'—என்று தனித் தனியே சொல்லி நாம் விளங்கிக் கொள்ளவில்லையே என்று விழிக்கிறது. நாமோ அந்தச் சொற்களை அறிவதோடு அவற்றை இணைக்கும் வழியும் அறிந்திருப்பதால் 'அப்பா, தாத்தா சோறு சாப்பிடுகிறார்' என்று சொல்லுகின்றோம்.

புலவர்கள் இந்தச் சொல்லோடு இதனைச் சேர்த்தால் இப்படி ஆகும் என்று அறிந்து அமைக்கின்றார்கள், இலக்கியம் பிறக்கிறது.

## அவ்வளவுதானா?

இல்லை. மிக இன்றியமையாததான இன்னொன்றும் சேர்ந்தால்தான் இலக்கியம் தோன்றும் அதுதான் **ஆவல்.** ஆவல் இல்லாமல் எதையும் செய்ய இயலாது. ஆவல் அளவுக்கு மீறினால் ஆபத்து என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை அது இல்லாவிட்டாலும் ஆபத்து என்பதும். ஆபத்து என்பது மட்டும் அல்ல, அழிவும் வந்துவிடும். இலக்கியம் படைக்கவேண்டும் என்ற ஆர்வம், ஆவலானால்தான் அது முயற்சியாகும். முயற்சி முன்வருமானால் முடியாத செயல் ஏதும் இல்லை! 'எண்ணியர் எண்ணியாங்கு எய்துப.'

இந்த ஆவல் வருவதற்குத் துணையாக இருக்கக்கூடிய வகையில் பிறருக்குத் தன்னால் இன்பம் கிடைக்கட்டும் என்ற எண்ணம் இருத்தல் வேண்டும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று எண்ணுதல் வேண்டும்.

திருவள்ளுவருக்குப் பலதுறைகளில் அனுபவம் பெருகியது. அந்த இன்பம் இவ்வையகம் பெறட்டும் என்று விரும்பினார், திருக்குறள் தோன்றியது. இளங்கோ அடிகள், கண்ணகியின் கதையைக் கேட்டு, அவள் பட்டதுன்பத்திலே மனங்கசிந்து, அவள்போல் ஆயிரம்பேர் படும் அவதி நினைந்து, கண்ணீர்விட்டு, யான் பெற்ற அந்த அனுதாபம் இவ்வையம் பெறட்டும் என்று நினைந்தார் சிலப்பதிகாரம் இலக்கியமாயிற்று.

## கற்பனை

'அனுபவத்தை மட்டும் படைப்பது என்றால் இயலுமா?' என்று சிலர் கேட்கலாம். பார்த்தது, கேட்டது இவற்றை மட்டும் பற்றி எழுதுவது என்றால் அதிலே சுவையும் இருக்காது. கண்ணகியின் கதையைக் 'குன்றக் குறவர்' சிலர் சொல்லக் கேட்டார் இளங்கோ. தன் அண்ணன் செங்குட்டுவன் வடநாடு சென்று கனகவிசயன் தலையில் கல் ஏற்றிக் கொணர்ந்ததைக் கண்டார். கேட்ட அதையும் கண்ட இதையும் பற்றி மட்டும் அவருடைய காப்பியம் சொல்லவில்லை. கோவலன் கண்ணகியின் அன்றாட வாழ்க்கையில் நிகழ்ந்த சிறப்பு நிகழ்ச்சிகளையும், செங்குட்டுவனின் செலவின் சிறப்பையும்—வேறு பிறவற்றையும் — எடுத்து விளக்கியிருக்கிறாரே எப்படி? அதுதான் **கற்பனை.**

கற்பனை என்பது எண்ணிப் பார்த்து இப்படி இருந்தது—இருக்கிறது—இருக்கும் என்று சொல்வதாகும். 'பொய்' என்றும் சொல்லலாம். ஆனால் முழுப் பொய் அல்ல. சில காரணங்களைக் கொண்டு இன்னது இப்படி ஆகும் என்று மனத்திலே செய்யும் முடிவு கற்பனை என்றால் சற்று பொருத்தமாக இருக்கும்.

கணவன் மனைவி என்றால் இப்படி வாழ்ந்திருப்பார்கள் என்று எண்ணி — கோவலனும் கண்ணகியும் இப்படி வாழ்ந்தார்கள் என்று சொல்வதுதான் கற்பனை. இன்று உள்ள நிலைமைகளைக் கொண்டு இனி இப்படி ஆகும் என்பதும் கற்பனையின் செயல்தான்.

கற்பனை அளவோடு இருந்தால் அழகாக இருக்கும். அளவு இகந்தால் 'பொய்' என 'பொக்'கெனத் தெரிந்துவிடும்.

ஒரு யானை நூறு தென்னை மரங்களை வேரோடு சாய்த்து விட்டது என்பது அளவான கற்பனை. பீமன் என்ற வீரன் பனைமரத்தைப் பிடுங்கிப் பல்லைத் தேய்த்தான் என்பது அளவிகந்த கற்பனை—பொய்.

"பாரி பாரி என்று பலவாறாக
ஒருவனையே புகழ்வர் செந்
தமிழ்ப் புலவர்கள். இந்த உல
கத்தைப் பாரி மட்டுமா காக்
கிறான். மாரி(மழை)யும் இருக்
கிறது அத்தொழில் செய்ய"

இது பாரியின் கொடை வளத்தைப் பற்றிய நல்ல நயமான கற்பனை.

"மேல் உலகத்திலே ஒரு மரம்
இருக்கிறது. அதற்கு 'கற்பகம்'
என்று பெயர். அது, யார்
எதைக் கேட்டாலும் உடனே
தடையில்லாமல் கொடுக்கும்"

இது அளவுகடந்த கற்பனை தானே?

## பாட்டு மட்டும்தானா

'இலக்கியம் என்றால்', இதுவரை பாட்டாகவே எடுத்துக்காட்டுகள் இருந்தமையால், 'பாட்டு மட்டும்தானா இலக்கியம்?' என்று கேட்கத் தோன்றுகின்றது இல்லையா? வெறும் பாட்டு மட்டும் அல்ல—பாட்டு இலக்கியத்தின் ஒருவகை, அவ்வளவுதான்.

வாழைக்காய் வாங்கிவருகிறோம். அது உணவுப் பொருளாக மாறுகின்றது. பொரியலாகிறது—வற்றல் ஆகிறது—கூட்டு ஆகிறது—வேறு பலவும் ஆகிறது. ஆனாலும் வாழைக்காய் வாழைக்காய் தான்!

உள்ளத்தில் உணர்ச்சி எழுகிறது; கருத்து தெளிகிறது; சொல் சேருகிறது. அது பாட்டாக வெளி வரலாம், உரைநடை (வசனம்) உருவில் வரலாம், நாடகமாகலாம்.

எந்த உருவம் கொண்டாலும் இலக்கியம் இலக்கியம்தான். அமைப்பு காலத்திற்கு ஏற்ப மாறுவது இயற்கைதானே!

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சட்டை இன்று உருவில் எத்துணை மாற்றம் பெற்றிருக்கிறது! அதே போல்தான் இலக்கியத்திலும்.

## எதைப்பற்றி?

அப்படி எவ்வகையான உருவம் பெற்றாலும் சரி என்றால்—எதைப்பற்றி எழுதுவது—எதை எழுதினால் இலக்கியம் என்று ஒப்புக்கொள்ளுவார்கள் என்று கேட்கலாம். எதைப் பற்றியும் எழுதலாம். இன்னது தள்ளுபடி என்று எதுவும் இல்லை. எல்லாமே பொருந்தும் என்றாலும், எது ஏற்றதோ அதைத்தானே தேர்ந்தெடுக்கிறோம்? இலக்கிய ஆசிரியன் எதைத் தேர்ந்தெடுத்துக்கொண்டால், தன் கருத்தைச் சொல்லமுடியும் என்று உளமாரக் கருதுகின்றாரோ அதைத் துணிவாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

வல்லவனுக்குப் புல்லும் வில்லாகும்!

## ஏனோ இந்த இலக்கியம்!

இவ்வளவு பாடுபட்டுப் படைக்கும் இலக்கியத்தினால் என்ன பயன்? எதற்காக இது?

நல்ல வினாதான்! எதற்காகவா, இன்பம் பெறத்தான். எளிதாகச் சொல்லிவிடலாம். இலக்கிய ஆசிரியரின் மனதில் தோன்றிய எண்ணங்களில்—மறதிக்குத் தப்பிப் பிழைத்த சிலவற்றைப் பற்றி நாம் எண்ணி, எண்ணி அந்த எண்ணத்திலே திளைத்து இந்தப் பொல்லாத உலகத்தை மறக்கத்தான் என்று சொல்வர் சிலர்.

இலக்கியத்தை எடுத்துப் படிக்கவேண்டும்; படிக்கும்போது இயன்றால் சுவைக்க வேண்டும். அதோடு அதை மறந்துவிட்டுப் பிறகு நாம் வாழ்க்கைக்கு வந்துவிடவேண்டும். வரும்போது அங்கிருந்து ஒன்றையும் மனதிலும் கொண்டுவரக்கூடாது. அப்படிக் கொண்டுவந்தால் இலக்கியத்தின் தூய்மை' கெட்டுவிடுகிறது என்கின்றனர் இவர்கள். இலக்கியம் பொழுதுபோக்கிற்கு மட்டுமே என்கிறார்கள்.

இதை ஏற்றுக்கொள்ள இயலுமா? இயற்கை நியதி அப்படி இல்லை. பயன் இல்லாத எதையும் இயற்கை வாழவைப்பதில்லை. அழித்து ஒழித்து விடுகின்றது. இயற்கையில் ஏதேனும் சில பொருள்கள் பயனற்று இருக்குமாயின் மனிதன் அதைவிட்டு வைப்பதில்லை. தானே முன்னின்று அழித்துவிடுகின்றான். அதனை **ஆக்கத்திற்கான அழிவு** என்கிறோம்.

இலக்கியத்தினால் வேறு ஒரு பயனும் இல்லை—பெறக் கூடாது, வெறும் இன்பம் மட்டும் பெறலாம் என்றால்—அந்த இன்பத்தை மட்டும் வேறு எதிலாவது—எங்காவது பெற்றுக்கொள்ளலாம் அல்லவா? அப்போது இலக்கியம் எதற்காக? அழித்துவிடலாமே!

'பழம் பழத்திற்கே' என்று யாரும் சொல்லிவிடுவதில்லை. 'பழம் எனக்கே' என்றுதான் பறிக்கிறோம். அதுபோல் 'இலக்கியம் இலக்கியத்திற்கே' என்றால் யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இலக்கியத்தினாலேயும் பயன் பெறவேண்டும். அதற்காகத்தான் இலக்கியமே எழுகின்றது.

மனித இயற்கையே, எதிலிருந்தும் ஏதேனும் பெறவேண்டும்என்பதுதான். அந்தவகையில் துணைசெய்யும் பொருள்களைக் காத்து, ஓம்பி, வளர்த்து வாழ்வதையும், பிறவற்றை அழித்துச் சிதைத்து, விடுவதையும் காணுகின்றோம். ஆகையினால் இலக்கியத்தினாலும் பயன் விளைய வேண்டும்.

## என்ன பயன்

முன்னால் போகிறவன் தடுக்கி விழுந்தால் அங்கே பள்ளமோ, மேடோ இருக்கிறது என்று பின்னால் வருகிறவனோ, அல்லது இவனே இன்னொரு முறை வருகின்றபோதோ தெரிந்து கொள்ளுகின்றானே, அதுதான் அனுபவம். அந்த அனுபவம் அறிந்து வாழ்க்கையில் மேம்பாடு அடைகின்றவனைத்தான் உலகம் போற்றும்.. **நேற்று இருந்த நிலையில் இன்று ஒரு ஏற்றம்; இன்று இருக்கும் நிலையில் நாளை ஒரு மாற்றம்.** இது வாழ்வின் நியதி. அதை இலக்கியத்திலிருந்து நாம் பெறவேண்டும்.

கோவலன் வாழ்க்கையில் இருந்த குறைகள் நம்முடைய வாழ்க்கையில்' புகாவண்ணம் காத்துக் கொள்ளுவதும், கண்ணகி பெற்றிருந்த பொறுமையும் பொறுப்புணர்ச்சியும் நமக்கு வாய்ப்பதும், மாதவியின் மனப் பண்பு' பெறுவதும், குறள் காட்டும் நெறி நிற்பதும் இலக்கியம் நமக்குச் செய்யும் தொண்டு; நாம் பெறும் பயன் இல்லையேல் இலக்கியம் இருத்தலின் இல்லாமையே நன்று.

## முடியுமா

அவ்வளவு பெரிய பணியைச் செய்ய இலக்கியத்தால் இயலுமா? இயலும் என்று அறிந்தவர் கூறுகின்றனர் மனிதனின் மனத்தினை உருவாக்க வல்ல ஆற்றல்மிக்க கருவி இலக்கியம் என்கின்றனர்.

"இலக்கியம் ஒரு தனி உலகம்.
நினைப்பளவில் அந்த நல்லுல
கத்திற்குச் சென்று மகிழ்ந்து
வாழ முடியும். வாழ்ந்து பழகப்
பழக உரிமையும் இன்பமும்
மேன்மேலும் பெருகச் செய்யும்
உலகம் அது"

என்று டாக்டர் மு. வ. அவர்கள் அந்த நல்லுலகத்தைப் பற்றி அறிமுகம் செய்து அழைக்கின்றார்கள்.

இலக்கிய உலகம் செல்வோம். இன்பமும் பயனும் சேர்ந்து பெறுவோம்.

---

அடுத்த இதழில்
**சங்க இலக்கியங்கள் இடம் பெறும்.**

# எதற்கு இந்த ஏமாற்றம் ?

"இப்பொழுது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின் படி, இந்தி ஒன்றுதான் 1965-க்குப் பின், அரசாங்க மொழியாக இருக்கும்—ஆனால், இந்தியுடன் ஆங்கிலம் செயலாற்ற அனுமதிக்கப் படும்—அதுவும் பத்து ஆண்டுகளுக்குப் பின் பரிசீலனை செய்யப் படும் என்ற நிபந்தனையும் இருக்கிறது. இதை, இந்தித் திணிப்பு என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லுவது? ஆனால், அரசாங்கம் மட்டும், 'இந்தி திணிக்கப்படமாட்டாது' என்று வாய் கூசாமல் சொல்லுகிறது!

உண்மையில் இந்தத் திட்டம், சமரசத் திட்டமாக இருக்கவேண்டுமானால், இந்தியுடன் ஆங்கிலமும் சமமான அளவில் செயலாற்றுவதற்கு வழி செய்திருக்கவேண்டும். தென் ஆப்பிரிக்காவில் இப்படித்தான் இரண்டு மொழிகளுக்கும் சம அளவுத் தகுதி தரப்பட்டிருக்கிறது. இந்தி அல்லது ஆங்கிலம் மாற்றுமொழி (Alternate Language) என்றாவது செய்திருக்கவேண்டும்."

—14-7-63: 'கல்கி' இதழில் பி. கோதண்டராவ்.

ஃ

## 1965-க்குப் பின்னர்

ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடிக்கிறதாம் சட்டத்தில்...
அறிவிக்கின்றனர் அமைச்சர்கள்!

ஆங்கிலமும் பயன்படுத்தப்படலாம்—
அறிவிக்கிறது ஆட்சிமொழிச் சட்டம்!

இந்தி ஆட்சிமொழியாகப் பயன்படுத்தப்படும்—
இதனைக் கூறுவதும் ஆட்சிமொழிச் சட்டமே!

ஃ

ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கும் என்றால்
ஏனிந்த சொல்மாற்றம்?
எதற்கிந்த ஏமாற்றம்?


தொலைபேசி எண்: 22715

## நித்திலக் குவியல்

(சென்னை மாணவர் மன்றத் திங்கள் இதழ்)

ஆசிரியர்: தமிழ்நெறிக் காவலர் பயிலை சிவமுத்து

தித்திக்கும் முத்தமிழ் மணம் கமழும். தமிழ் மொழி வளமும், தமிழ்க்கலை நலமும், தமிழ் மக்கள் முன்னேற்றமும், ஆசிரியர்கள் நல்வாழ்வும் குறிக்கோளாகக் கொண்டது. மன்ற செய்திகளும், பிற செய்திகளும் அடங்கியது. அனைவரும் விரும்பும் அரிய எழுத்தோவியங்கள் நிறைந்தது.

சந்தா விவரம்: ஆண்டுக் கட்டணம் ரூ. 3-00
மன்ற உறுப்பினர்க்கு ரூ. 2-00
தனி இதழ் 25 காசுகள்.

விவரங்கட்கு:— ஆசிரியர், நித்திலக்குவியல்
மாணவர் மன்றம்
12, வேங்கட அய்யர் தெரு, சென்னை-1




# அடக்குமுறை—ஒரு வெறி நாய்!

—(0)—

இந்தி வந்தால் நாடு சீரழியும் என்று பல பெரும் அறிஞர்கள்—குறிப்பாக மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார், ராஜாஜி, டாக்டர் சுப்பராயன் போன்றவர்கள் இடித்துக் கூறியும் இந்த சர்க்கார் கேட்கவில்லை. ஆகவேதான் சட்டத்தின் ஒரு பகுதியை எரிப்பது என்று முடிவு செய்தோம். அதற்காக சிறைசெல்லவும்' தயார் செய்துகொண்டோம். சிறைசெல்வதுபற்றி என். வி. நடராசன் கூறுகையில், அவரை கடைசி பந்திக்கு வா என்று கட்டளையிட்டதாக வருத்தப்பட்டார். நான் கூறுகிறேன் கடைசி பந்திக்கு வந்தாலும் வடை பாயசத்துடன் இனிப்பும் கிடைக்கும் கவலைப்படவேண்டாம்.

சிறை என்றதும் எங்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் சந்தோஷம்தான்.. வீட்டில் உள்ள மனைவிமார்கள் எங்களைப் பார்க்க நேரே சிறைக்கு வந்தால் சந்திக்க முடியும். 55 வயது வந்த பிறகு நாங்கள் திண்ணையில் தூங்கினால் என்ன? சிறையில் தூங்கினால் என்ன? ஆகவே நாங்கள் சிறையைப்பற்றி கவலைப்படவில்லை.

நான் சட்டத்தை எரிக்கப்போகிறேன் என்றது முதல் குற்றம். எரிக்கத் தூண்டியது இரண்டாவது குற்றம். இந்த இரண்டு குற்றத்திற்காகவே என்னைச் சிறையில் அடைத்து இருக்கவேண்டும். ஒருவேளை சிறைக்கு வெள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ அதனால்தான் இன்னும் என்னைக் கைது செய்யவில்லை.

தெருக்கோடியில் வெறிநாய் இருக்கிறது என்றால், என்னை கடிக்கவில்லையே என்று யாரும் சும்மா இருக்க மாட்டார்கள். அரசாங்கத்தின் அடக்குமுறை வெறி நாய் இன்று என்னைக் கடிக்கும். 'தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, மாட்டைக் கடித்து' என்ற பழமொழியைப் போல் நாளை காங்கிரஸ்காரர்களையும் கடிக்கும்.

கழகம் என்ற ஒரு அமைப்பு இருந்தால்தான் தட்டிக் கேட்பார்கள் என்று கருதி காங்கிரஸ்காரர்கள் நாட்டுப் பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டுவந்து அழிக்கப்பார்த்தார்கள். அவர்கள் அரசியல் சட்டத்தை திருத்தியது போல நாமும் நம் கட்சியின் கொள்கையை மாற்றுகிறோம்.

இது சமயம் பார்த்து எதிர்க்கட்சிகள் கிண்டலும், கேலியும் செய்கிறார்கள்.

பிரிவினைத் தடைச்சட்டத்தை மீறுபவர்கள் மீறலாம். நான் மீறக்கூடாது என்று கட்டளையிடவில்லை. அப்படி கட்டளையிட நான் யார்? சங்கராச்சாரியைப்போல் ஒரு மதத் தலைவரா? ஆகவே கழகம் என்ற காரை சேற்றில் இறக்கி விட்டுவிட்டு, கூலி ஆளைப் பிடித்து தள்ளுங்கள் என்று சொல்லமாட்டேன். அப்படி சேற்றில் இறக்கிவிட்டு கழகத்தைப் பாழ்படுத்தவும் மாட்டேன். கழகம் என்ற ஒரு அமைப்பு இருந்தால்தான் இந்தியை எதிர்க்கமுடியும் மற்றும் காங்கிரஸ்காரர்கள் எதேச்சாதிகாரமாக செய்யும் அநீதிகளை எதிர்க்க முடியும்.

—விழுப்புரம் கூட்டத்தில் அறிஞர் அண்ணா.

# "திராவிடநாடு" வெற்றி !

"திராவிடநாடு திராவிடருக்கே" என்ற இந்த இனிமையகன கீதம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கு மகத்தான வெற்றி தேடித் தந்துவிட்டது! கண்ணீரும் செந்நீரும் ஊற்றி வளர்த்த இந்த இலட்சியத்திற்கு கிடைத்த வெற்றியைக் கண்டு நமக்கெல்லாம் உள்ளம் பூரிக்கிறது.

இந்த லட்சியத்திற்காக நாம் பட்டபாடு கொஞ்சமா? எத்தனை உயிர்களை மாற்ருர்கள் கொத்திக் கொண்டனர். ஏளனக் கணைகளை வீசினர். திராவிட நாடா? அப்படி ஒரு நாடு உண்டா? என்றனர். கல்வெட்டுக்களைக் காட்டினேம். வரலாற்று ஏடுகளை புரட்டி வைத்தோம்! அதோடு வாய் மூடிவிட்டனரா, இல்லை. இதற்கு எல்லை எங்கே என்றனர்? 'ஜின்னு' பாகிஸ்த்தானை கேட்டபோது முஸ்லீம்கள் எங்கெங்குவாழுகின்றனரோ அதுஎல்லாம் பாகிஸ்தான் தான் என்ருர். அப்படியென்ருல் உருவான அமைப்புகள் கொண்ட தமிழகமும், ஆந்திரமும், கேரளமும், கர்நடாகமும் இனத்தால் ஒன்றுபட்டு இருக்கின்ற நான்கு மொழியினர் விடுதலைவாங்கும்போது தென்னகப் பகுதியில் எதுவரைக்கும் வசிக்கின்றனரோ அது தான் எல்லை என்ருேம்! நமக்கேன் இந்தத்தொல்லை என்று எல்லைப் பிரச்சினையை விட்டு விட்டனர்!

பிறகு பிரிந்தால் வாழுமா என்றனர்? 16 லட்சம் மக்கள் கொண்ட ஜமைக்கா வாழும் போது பத்தரைக்கோடி மக்களைக் கொண்ட திராவிடம் வாழாதா என்ருேம். கடைசியாக வெளியில் இருந்து கொண்டுதானே பேசுகிருர்கள் பிரிவினை கொள்கையைமுன்வைத்துவெற்றி பெற்று சட்டசபைக்கு வாருங்கள் பார்ப்போம் என்றனர். 1957-ல் தேர்தலில் 15 பேரை சட்டமன்றத்திற்கும், 2 பேரை பாராளு மன்றத்திற்கும் அனுப்பிவைத்தோம். பிறகு நகராட்சிமன்றமே நம் கையில்! 1962 தேர்தலில் எதிர்கட்சியாகவும் 8பேர் பாராளு மன்றத்தில் உறுப்பினர்களாகவும் வென்ருேம்.

பிறகுதான் தடைச்சட்டம். பிரிவினை இந்த நாட்டிற்கு தீதானது என்ருல் கட்சி துவக்கத்திலேயே ஏன் தடைசட்டம் கொண்டுவந்திருக்கக் கூடாது?

ஆனல், இவர்கள் நினைத்தது இந்த கட்சி எங்கே வளரப் போகிறது? இதன் கொள்கையை யார் ஏற்றுக்கொள்ளப் போகிருர்கள் என்று எண்ணினர்கள். இவர்கள் எண்ணத்திற்கு உண்மையை எடுத்துக்காட்டும் கண்ணுடியாக சமீபத்தில் திருச்செங்கோடு தேர்தலும் திருவண்ணமலைத் தேர்தலும் நடந்தது!

நாங்கள் இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும் என்கிருேம். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிரிவினைவேண்டும் என்கின்றனர். எனவே உங்கள் ஓட்டு பிரிவினைக்கா? இந்திய ஒற்றுமைக்கா? என்றனர். மக்கள் பிரிவினைக்கே வெற்றியைத் தேடித் தந்தனர். இதிலிருந்து அவர்கள் மாபெரும் உண்மையைத் தெளிவாக புரிந்துகொண்டனர். இன்று மக்கள் ஆர்வத்தையும் ஆதரவையும் பார்த்தால் அடுத்த தேர்தலில் நிச்சயமாக கழகம் தமிழக சட்டமன்றத்தைக் கைப்பற்றிவிடும். எனவே அவர்கள் சட்டசபைக்கு வராதபடி தடை கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் நாம் பிழைத்தோம் என்ற எண்ணத்தில் தடைச்சட்டத்தைக் கொண்டு வந்தனர்.

ooooooooooooooo

**செ. கஜபதி**

ooooooooooooooo

நமது ஆற்றல்மிக்கத் தலைவர், அறிவுலகமேதை அண்ணு அவர்கள் அந்த வஞ்சக வலைக்குள் சிக்காமல் தப்பிவந்துவிட்டார்.

பிரிவினையைக் கைவிட்டால் ரோஜாப்பூ மாலை போடுவேன் என்று தானே தலைவன் தன் நிழலே தொண்டன் என்று இருக்கின்ற கட்சித் தலைவர்களெல்லாம் நாம் அந்த வஞ்சக வலையில் சிக்காததைக் கண்டு வயிற்றெரிச்சல் கொள்கின்றனர்.

பார்த்தாயா! பார்த்தாயா! நாங்கள் அப்போதே சொன்னேம் திராவிட நாடு கிடைக்காது அது ஒரு சற்பனை என்ருேம். ஆனல் அண்ணுத்துரை நல்ல சந்தர்ப்பத்தைப் பார்த்து கைநழுவ விட்டார்! என்று கூறுகின்றனர்!

நாம் திராவிடநாடு கிடைக்காது என்பதற்காகவா விட்டு விட்டோம்! இல்லவேயில்லை!

கொள்கையை கொள்கையால் வெல்ல முடியாத வக்கற்ற ஆட்சி தடைச்சட்டத்தின் துணையை நாடுகின்றது என்ருல் இந்த வெட்கக்கேடு வேறென்ன உண்டு?

அகில இந்தியக் கட்சி! மாபெருந் தலைவர்களால் சீரோடும் சிறப்போடும் வளர்க்கப்பட்ட மகத்தான இயக்கம்! இத்தகைய பெரிய அமைப்பை வைத்திருக்கின்ற அரசாங்கமே நம்மைக் கண்டு பயந்து அரசினர் சட்டத்தைத் திருத்திக்கொண்டது என்ருல் இந்த வெட்கக்கேட்டை எங்கே சொல்லித் தொலைப்பது?

அறிஞர் அண்ணு சொன்னது போல் எதிரி, ஒருவனை கத்தியால் குத்த வருகிருனென்ருல், அவன் அந்த கத்தியிடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசிப்பானே தவிர மார்பைக்காட்டி கத்தியால் குத்து பார்ப்போம் என்று எந்த மடையனும் சொல்லமாட்டான் ஆனல் இவர்கள் நம்மைப் பார்த்து கூறுகின்றனர். பயந்துவிட்டனர்! பயந்துவிட்டனர் என்று.

நம்மை சிறையில் தள்ளிவிட்டு மீண்டு இவர்கள் நிரந்தரமாக ஆளுவதற்காக தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து விட்டனர்.

ஆனல் நமது மாற்றுக்கட்சித் தோழர்களும் ஆளுங்கட்சியினரும் கொஞ்சம் சிந்திக்கவேண்டும்! திராவிடநாடு கிடைக்காது! அதற்கு எல்லையே ஏது? அது ஒரு மாயை! அதற்கு ஆதரவு இல்லை என்றெல்லாம் கூறிவந்தோர் ஏன் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டும்?

'திராவிடநாடு' விடுதலை கொள்கை வெற்றிநடை போடுவதைக்கண்ட அரசாங்கம் ஜனநாயக வழியில் நம்மை எதிர்த்திடும் துணிவில்லாமல் தடைச் சட்டம் கொண்டுவந்து தகர்க்க நினைப்பது அவர்களின் தோல்வியையும் நமது வெற்றியையும் எடுத்துக்காட்டுகிறது.

# தமிழினைக் காத்திட வாரீர்!

——(0)——

தமிழினைக் காத்திட வாரீர்!—செந்
தமிழினைக் காத்திட வாரீர்!

அமிழ்தினும் இனிய நந்தமிழ் மொழியை
அழித்திட வந்திடும் இந்தியை ஓட்டித்
[தமிழி]

முத்தமிழ் மொழியை மூலையில் ஒதுக்கி;
முடிசூட விழைகுது இந்தியாஞ் சிறுக்கி,
இத்தரை தன்னில் இந்திதா மோட
இசையுற தமிழர்கள் இன்னிசை பாடத்
[தமிழி]

உலகிற்கு இன்று உயர்வாங் கிலமே;
உறுதுணை புரிவதால் ஏற்பது நலமே,
இலக்கிய இலக்கண மில்லாத இந்தி
இனியநம் மொழியினைக் கெடுத்திடா முந்தித்
[தமிழி]

இந்திதாம் ஆண்டிடல் இனிதெனச் சொல்வார்;
இங்குள பிறமொழி தம்மையே கொல்வார்!
இந்திதாம் ஆள்வதால் அடைவோம்நாம் சிறுமை
இன்னுயி ரீந்தும்நாங் காப்போமே பெருமைத்
[தமிழி]

—வேல்வேந்தன்

# மாணவர் மன்றம்

——

## இன்பத் தரைச் செலவு

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைக் காண 8—12—63 ஞாயிற்றுச்கிழமை மன்ற நிலையத்திலிருந்து (12, வேங்கட அய்யர் தெரு, சென்னை-1) புறப்பட்டு அன்று மாலையே திரும்ப தனி ஊர்தி வண்டிகள் ஏற்பாடாகியுள்ளது. போக வரக் கட்டணம் ரூ. 3 மட்டுமேயாம். பள்ளியின் சார்பில் அப்பா அவர்கள் அளிக்கும் அன்பு விருந்து குறிப்பிடத்தக்கதாகும்.

வாழ்த்துவோம் வாரீர் என்று பெரியோர்களையும், தாய்மார்களையும், மாணவச் செல்வங்களையும் மன்றத் தலைவர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்கின்ருர். 20—11—63க்குள் மன்ற நிலையத்திற்கு வந்து கட்டணத் தொகையைச் செலுத்திப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

நலையங்கம் தொடர்ச்சி

அடக்கிவிடலாம் என்று எந்த அரசு எண்ணிஞலும் துவக்கத்தில் வேண்டுமாஞல் அரசினருக்கு வெற்றியைத் தருவதுபோல் தோன்றிஞலும் இறுதியாக ஆளுர் கட்சி மக்கள் மன்றத்தால் முறியடிக்கப்படும் என்ற வரலாற்றுப் பாடத்தை இன்றைய காங்கிரஸ் ஆட்சியினர் உணராதது ஏனே? காந்தீய நெறியை எல்லாத் துறைகளிலும் மறந்துவிட்டதைப் போலவே எதிர்க்கட்சிகள் கூறும் நியாய வாதத்தை ஒப்புக்கொள்ளவேண்டிய மிக முக்கிய பிரச்சினையிலுமா காங்கிரஸ் ஆட்சி காந்தீய நெறிக்கு மாருக நடக்க வேண்டும் என்று கேட்கிருேம்.

சட்டம்—நாட்டின் அமைதிக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் பாதுகாப்பாக யிருத்தல் வேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் இதயபூர்வமாக உணர்ந்திருக்கிறது. ஆஞல் சட்டத்தைப் பிரயோகிப்பவர்கள், சட்டம் எந்த பாதுகாப்புக்காக பயன்படுத்தபபட வேண்டுமோ அதற்கு மாருக—அதாவது தங்கள் கட்சியின் ஆசாபாசத்திற்காகப் பயன்படுத்துவார்களேயாஞல் சட்டம் அதனின் புனிதத் தன்மையை இழந்துவிடுவது மட்டுமல்லாமல், சட்டத்தைக்கண்டு மக்கள் மதித்து நடக்கும் மனப்பான்மையும் சீர்குலைந்து விடுவது இயற்கை. அப்படி அந்தச் சட்டம் மதிப்பிழக்கப்படுகிறதென்ருல், அதைப் பிரயோகிப்பவர்களின் தவருன போக்கே அதற்குக் காரணமாகும். அவ்வித குற்றத்திற்கு எந்தக் கட்சி, ஆட்சிபீடத்திலிருக்கிறதோ அந்தக் கட்சிதான் பதில் சொல்லவேண்டிய நிலை ஏற்படும். அத்தகு குற்றத்திற்கு இன்றைய ஆளும் கட்சி தன்னைத்தானே ஆளாக்கிக்கொள்ளப் போகிறதா அல்லது விவேகமுடன் நடக்கப் போகிறதா என்பதே நமது பணிவன்பான கேள்வியாகும்.

ஆளும் கட்சியினர் எவ்வாறு நடப்பார்களோ, புரியவில்லை. அவர்களுக்கு இதுபோல எடுத்துக்கூறலாமேயன்றி வலியுறுத்த முடியாது.

ஆஞல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றும் தோழர்களும், ஆதரவாளர்களும் நமது இயக்கத்தின் மாபெருந்தலைவர், தென்ஞட்டுக் காந்தி அறிஞர் அண்ணு அவர்கள் விடுத்துள்ள அன்புக் கட்டளைக்கேற்ப தங்கள் தங்கள் கடமைகளை, அமைதி குலையாமலும், கட்டுக்கோப்பாகவும், அறவழி நின்றும் நிறைவேற்றிவர வேண்டும் என்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

அண்ணு காட்டியுள்ள அறவழிநின்று அவரவர்களுக்குக் கழகம் தந்துள்ள, அல்லது அவரவர்கள் கழகத்திடம் கூறியுள்ள உறுதிக்கேற்ப கடமைகளை நிறைவேற்றுவோமாஞல், இந்திய அரசியலார், அதன் பிரதமர் பண்டித சவகர்லால் நேரு அவர்கள் இந்தித்திணிப்பு உத்திரவை திரும்பப்பெறுவார்கள் என்பது மட்டுமின்றி இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள அந்தந்த மொழிவழி மக்களின் தன்மானமும் தாய்மொழியும் தலைநிமிர்ந்து நிற்குமென்பது உறுதி.

வாழ்க அண்ணு!
வெல்க அவர்தம் தொண்டு!
வீழ்க இந்தி ஆதிக்கம்!

என். வி. நடராசன்

# தீ விபத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லீம் குடும்பங்களுக்கு தி. மு. க. தலைமைக்கழக உதவி

திருவண்ணுமலைத் தொகுதி இடைத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதையடுத்து, தி. மு. கழகத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம்கள் வாழும் பகுதியான ஆவூர் என்னும் கிராமத்தில் மாற்ருரின் செயலால் முஸ்லிம்களின் வீடுகள் தீக்கிரையானது நினைவிருக்கலாம்.

இத்தீவிபத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெருமக்களின் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு திராவிட முன்னேற்றக்கழகத் தலைமை கழகச் சார்பில் ரூ. 1000 வழங்கப்பட்டது.

இத்தொகையை தலைமைக் கழகச் சார்பில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் வழங்கிஞர்.

முஸ்லிம் லீக் சார்பில் தோழர் ஆ. கா. ஆ. அப்துஸ் சமதும், அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப. உ. சண்முகமும் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சி 11—11—63 மாலை 6-மணியளவில், ஆவூர் பள்ளிவாசல் அருகில் நடைபெற்றது; முஸ்லிம் பிரமுகர்களும், ஆவூர் லீக் கிளை நிர்வாகிகளும், கழக நிர்வாகிகளும், வீடு இழந்து தவிக்கும் முஸ்லிம் குடும்பத்தினரும் பெரும் அளவில் வந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், முஸ்லிம் லீக் தலைவர் அப்துஸ் சமத், சட்டமன்ற உறுப்பினர் ப. உ. சண்முகம் ஆகியோரை, உள்ளூர் முஸ்லிம் பெரியார்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். தீக்கிரையான வீடுகளை இவர்கள் பார்வையிட்டனர்.

தோழர் ப.உ. சண்முகம் அவர்கள் பேசுகையில், ஆவூர் முஸ்லீம் மக்களுக்கு தலைமைக் கழகச் சார்பில் அளிக்கப்படப்போகும் தொகையைப் பற்றியும், வீடு இழந்து தவிக்கும் முஸ்லீம் மக்களின் நிலையைப்பற்றியும் எடுத்துக் கூறிஞர்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் பேசுகையில், தி. மு. கழகத்திற்கும்—முஸ்லீம் லீகுக்கும் இடையேயுள்ள உறவைப் பற்றி விளக்கிஞர்.

அவர் மேலும் கூறியதாவது:—

'தலைமைக் கழகச் சார்பில் அளிக்கப்படும் இந்தக் சிறிய உதவியிஞல், உங்கள் துயரம் முழுமையும் தீர்ந்துவிடப் போவதில்லை. ஆஞல், முஸ்லீம் மக்களின் இன்பதுன்பங்களில் கழகத்திற்கு எப்பொழுதும் பங்கு உண்டு என்பதை இவ்வுதவி எடுத்துக் காட்டுகிறது.

இறுதியாக, நிதியைப் பெற்றுக் கொண்டு பேசிய அப்துஸ்சமத் அவர்கள், தி.மு. கழகம் அளித்த உதவிக்காக நன்றி தெரிவித்துக் குறிப்பிட்டதாவது:—

"இவ்வுதவியால், ஆவூர் முஸ்லீம் பகுதி மக்கள் மட்டுமல்லாது, சிறப்பாகத் தமிழ்நாட்டிலும் பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திலும் உள்ள முஸ்லீம் மக்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள்.

கழகமும் முஸ்லீம் லீகும் கொண்டுள்ள தொடர்பு மூலம் நாட்டில் நல்லதொரு ஆட்சி அமைய வழிகோலப்படும் என்பது உறுதி."


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.



தயாரிப்பாளர்கள்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# அஞ்சாநெஞ்சன் பதில்!

**வி. என். பாஸ்கரன், வேலூர்.**

கே: தி. மு. கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு தமிழ் தேசியக் கட்சி ஆதரவு தர முடியாதென்றும், போராட்டமே அவசியமில்லையென்றும் தீர்மானித்திருக்கிறதே - இதுபற்றி உங்கள் பதில் என்ன?

ப: இந்தித் திணிப்பு என்பது இப்போது இல்லவேயில்லை எனவே தி. மு. கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு இப்போது அவசியமேயில்லை. வேறு எதற்காகவோ இந்தி எதிர்ப்பு என்பதாகப் போராட்டம் நடத்துகிறார்கள். ஆதலாலே நமது கட்சியின் ஆதரவைத் தருவதற்கில்லையென்று தமிழ்த் தேசியக் கட்சி முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

அப்படியானால், தமிழ்த் தேசியக் கட்சி இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தியது ஏன்? இது அவர்களுக்கே புரியவில்லையா அல்லது ஒருநாள் கூத்தா யென்று அக்கட்சித்தலைவரைக் கேளுங்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பொறுத்தவரை, தி. மு. கழகத்தை எதிர்க்கமாட்டேன், போராட்டத்தில் ஈடுபட்டு அக்கட்சித்தலைவர் சிறை செல்லுவாரானால் அவரை விடுதலை செய்யவேண்டுமென்று கூட போராடுவேன் என்று பேசியிருக்கிறீரே, அதற்கு மாறாக இன்று இப்படிப் பேசுகிறீரே, இதுதான் ஆரோக்கிய அரசியலா என்று அக்கட்சித் தலைவரைக் கேளுங்கள்.

அரசியல் துறையில் தாம் மகா புத்திசாலி என்று மனப்பால் குடித்துக்கொண்டிருப்பவர்கள், இவ்வித முரண்பாடுகளுக்கும், அரசியல் ஞானசூன்யத்திற்கும் ஆளாகத்தானே செய்வார்கள்! அரசியலை நன்கு உணர்ந்தவர்களும், எவ்வளவு வேறுபாடுகளிருப்பினும் பிரச்சினையின் தன்மையினை சீர்தூக்கிப்பார்த்து அபிப்ராயம் கூறுபவர்களும் கழகத்தின் அறப் போராட்டத்தை ஆதரிக்கிறார்கள். தங்களைப்போன்றவர்கள் நினைவில் கொள்ளவேண்டியது இதைத்தான். ○

---

**தம்பி!**

உலகத்துப் பீடைகள் அனைத்துக்கும் தீமூட்ட எனது விரல்கள் பலமற்றிருக்கலாம். ஆனால் உன்னை இரண்டாந்தரக் குடிமகனுக்கும் இந்திக்குத் தீவைக்க உன் அண்ணனின் கரங்கள் துவளப் போவதில்லை!

— அண்ணா

---

13—11—63 அன்று இரவு கைது செய்யப்பட்ட

**கழகத் தோழர்கள்**

சி. பி. சிற்றரசு
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
காஞ்சி கல்யாணசுந்தரம்
நீலநாராயணன்
டி. கே. கபாலி எம்.சி.
கே. எம். கண்ணபிரான்
எம். ஆர். கண்ணன் எம்.சி.
கபாலமூர்த்தி எம்.சி.
செங்குட்டுவன்
மு. மாசிலாமணி
மா. ரா. ஏழுமலை
ஜானகிராமன்
கணேசன்
சி. மாசிலாமணி




ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1